பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 ஆடி 31 வியாழக்கிழமை (15-08-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 180

# சந்திரிகா அரசுக்கு எதிராக நாடளாவிய போராட்டம்!

## ஐக்கிய தேசியக் கட்சி முஸ்தீபு

கொழும்பு, ஓகஸ்ட். 15

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு ஆட்சிக்கு வந்து நாளையுடன் இரண்டு ஆண்டுகள் பூர்த்தியாகின்ற போதிலும், அரசு தனது தேர்தல் வாக்குறுதிகள் எவற்றையும் இதுவரை நிறைவேற்றவில்லை என்று தெரிவித்து நாடளாவிய எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தப் போவதாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

இளைஞர்கள், தொழிலாளர்கள் உட்பட பல்வேறு தரப்பட்ட பிரிவினரையும் ஒன்றுசேர்த்து ஐ. தே. க. நாடளாவிய எதிர்ப்புப் போராட்டங்களையும் பேரணிகளையும் நடத்தத் திட்டமிட்டுள்ளது, பத்திரிகைச் சுதந்திரம், வடபகுதி யுத்தம், நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை ஆகியனவற்றை மக்களுக்கு எடுத்துரைக்கும் நோக்கில் எதிர்ப்புப் பேரணிகளை நடத்தவுள்ளதாக ஐ.தே.க. தெரிவித்துள்ளது.

விரைவில் நடைபெறவிருக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இரு பொலிஸார் உயிரிழப்பு

யாழ்ப்பாண நகரில் கூட்டுறவு மொத்த விற்பனை நிலைய களஞ்சியத்துக்குப் பாதுகாப்பு வழங்கிய பொலிஸார் மீது நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் இரு பொலிஸார் உயிரிழந்தனர்.

பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் இவ்வாறு தகவல் வெளியிட்டது. (உ-3-4)

## அகதிகள் வருகை குறித்து இந்தியா கவலை தெரிவிப்பு

சென்னை, ஓக. 15

இலங்கையில் பாதிப்புக்குள்ளான தமிழர்கள் இந்தியாவுக்கு வரும் சூழ்நிலை எழுந்துள்ளது குறித்து இந்திய அரசு தீவிர கவலை வெளியிட்டுள்ளது.

நிலைமையைச் சீர் செய்வதற்கு அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படும் என்றுஇந்தியா நம்புவதாக இந்திய வெளியுறவு அதிகாரி ஒருவர் புதுடில்லியில் அறிக்கை ஒன்றில் தெரிவித்தார்.

இதற்கு முன்னதாக —

இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் தாக்கப்படுவது குறித்து இந்திய மத்திய அரசு கண்டனம் தெரிவிக்காது விட்டாலும் வருத்தம் தெரிவிக்கவாவது முன்வர வேண்டும் எனத் தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி கேட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ- 3)

## உரிய நடவடிக்கை எடுக்க தமிழக அரசு முயற்சியாம்!

சென்னை, ஓக. 15

''இலங்கையில் பாதிக்கப்பட்டுள்ள அப்பாவித் தமிழர்களைக் காப்பாற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுப்பது குறித்து இந்திய மத்திய அரசுடன் தமிழக மாநில அரசு தொடர்புகொண்டு உரிய முயற்சிகளை எடுத்துவருகின்றது'' — தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி நேற்று தமிழக சட்டப் பேரவையில் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழகம் வரும் சூழ்நிலை மீண்டும் ஏற்பட்டிருப்பது குறித்து தமிழக சட்ட சபையின் சட்டப் பேரவை உறுப்பினர்கள் சிலர் கொண்டு வந்த கவன ஈர்ப்புப் பிரேரணைக்குப் பதிலளித்துப் பேசுகையிலேயே அவர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவின் தலையீட்டை கோருகிறது பாரதீய ஜனதா

சென்னை, ஓக. 15

''இலங்கையில் இராணுவத் தாக்குதலுக்கு தமிழர்கள் உள்ளாக்கப்படுவதைத் தடுத்து நிறுத்த அந்த விடயத்தில் இந்தியா தலையிட வேண்டும்'' — இவ்வாறு பாரதீய ஜனதாக் கட்சியின் தமிழ் நாடு பிரிவு பகிரங்கமாகக் கோரியுள்ளது.

இலங்கை இராணுவத்தின் நடவடிக்கைகளினால் இலங்கைத் தமிழ் அகதிகள் பெருமளவில இந்தியாவுக்கு வரக்கூடிய சூழ்நிலை இருப்பதால் இதனை இலங்கையின் உள் நாட்டுப் பிரச்சினையாக மட்டும் கருதிவிட முடியாது என்று பாரதீய ஜனதாக் கட்சியின் தமிழக மாநிலச் செயலாளர் தெரிவித்தார். (உ-3)

## புலிகள் கவலை தெரிவிப்பு

சென்னை, ஓக. 15

இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழ்நாடு செல்லும் சூழ்நிலை ஏற்பட்டிருப்பது குறித்து விடுதலைப் புலிகள் இயக்கம் கவலை தெரிவித்திருப்பதாக இந்திய வானொலி நேற்று அறிவித்தது. (உ-4)

## உண்ணாவிரதப் போரில் ஈடுபட்டோர் கைது!

சென்னை, ஓக. 15

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக தமிழகத்தில் பாட்டாளி மக்கள் கட்சியின் மகளிர் அணியினர் ஆரம்பித்த சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்டோர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்; பின்னர் அவர்கள் விடுதலையாகினர்.

— இவ்வாறு செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஈழத் தமிழர்கள் அல்லற்படுவதைத் தடுக்கவும் அவர்களுக்கான உணவு மற்றும் மருந்துப் பொருள் விநியோகம் தடுக்கப்படாமல் விநியோகம் செய்யப்படுவதை உறுதிப்படுத்தவும இவ்விரு விடயங்களிலும் இந்திய, தமிழக அரசுகள் தலையிட வேண்டும் எனக்கோரி பாட்டாளி மக்கள் கட்சியின் மகளிர் அணியினர் இப்போராட்டத்தை ஆரம்பித்தனர் என்பது தெரிந்ததே. (உ-3)

## அரச படைகள் மற்றும் புலிகள் மீது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு

### மன்னிப்புச் சபை கண்டனம்

லண்டன், ஓக. 15

ஸ்ரீலங்காவில் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் அரசுத் துருப்புக்களும் விடுதலைப் புலிகளும் மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவதாக சர்வதேச மன்னிப்புச் சபை குற்றம் சுமத்தியிருக்கின்றது. இரு தரப்பின் செயற்பாடுகளையும் மன்னிப்புச் சபை தனது பிந்திய அறிக்கையில் கண்டித்தும் உள்ளது.

மனித உரிமைகள் பேணப்படும் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தேர்தலின்போது வாக்குறுதி அளித்திருந்தபோதிலும் சட்ட விரோதமான கொலைகள் தொடர்ந்து இடம்பெறுவதாக அந்த அறிக்கை தெரிவித்தது.

புலிகளால் அப்பாவிச் சிங்கள மக்களும், மாற்றுத் தமிழ்க் குழுக்களும் கொலலப்படுவதாகவும் அறிக்கை மேலும் தெரிவித்தது. (உ-3-10)

## வெளிநாட்டு மத்தியஸ்தம் மூலமே யுத்தத்துக்கு முடிவு காணமுடியும்

### பிரதி அமைச்சர் சந்திரசேகரன் கூறுகின்றார்

கொழும்பு, ஓக. 15

'' பிற நாடு ஒன்றின் மத்தியஸ்தம் இல்லாமல் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர முடியாது என்பது உலக வரலாறு புகட்டும் பாடமாகும். ''

'' அரசாங்கம் யுத்தத்தில் காட்டும் ஆர்வத்தை, அதனால் பாதிக்கப்பட்ட அப்பாவித் தமிழ் மக்கள் மீது காட்ட வேண்டும். ''

— வீடமைப்பு நிர்மாணத் துறை, பொது வசதிகள் மற்றும் பெருந்தோட்ட வீடமைப்பு பிரதி அமைச்சர் திரு. பி. சந்திரசேகரன் இவ்வாறு கூறியிருக்கின்றார்.

தொடரும் யுத்தம் எதில் முடியும் என்பதை விட, அதனால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தே நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பேச்சு வார்த்தைக்கு தயார் என்ற கருத்துக்கள் நம்பிக்கை ஊட்டுவதாக இருந்தாலும் அவை உறுதியாக நடைபெற வேண்டும்.

இதில் இந்தியாவின் மத்தி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி மீதான உணவுத் தடை தற்காலிகம் என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, ஓக. 15

வடபகுதியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகள் மீதான தடை தற்காலிகமான நடவடிக்கையே — என்று ஜனாதிபதி சந்திரிகா தென்கொரியாவில் வைத்து அறிவித்திருக்கிறார்.

தென்கொரியாவில் தாம் மேற்கொண்ட மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தின் இறுதியில் ஜனாதிபதி சந்திரிகா, அங்கு பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தினார்.

அப்போதே அவர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு உட்பட்ட வன்னிப் பெருநிலப் பரப்புக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை எடுத்து வருவதில் கடந்த நான்கு வாரங்களாக தடங்கல் நிலை இருந்தது தெரிந்ததே. வவுனியாவில் இருந்து உணவு லொறிகள் வன்னி நோக்கிப் புறப்படுவதற்குப் பாதுகாப்பு அமைச்சு அனுமதியளிக்காதிருந்து, கடந்த திங்கட்கிழமையே அதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

இதனையே ஜனாதிபதி தடை என்று குறிப்பிட்டிருக்க வேண்டுமென அவதானிகள் கருதுகிறார்கள்.

தென்கொரியாவின் தலைநகர் சியோலில் வைத்து ஜனாதிபதி இது குறித்துத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழில் தாக்கலான மனுவுக்கு தொண்டமான் தரப்பில் ஆட்சேபம்!

## கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் சுவையான வழக்கு

முன்னாள் இ. தொ. கா. செயலாளர் எம். எஸ். செல்லச்சாமிக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்துள்ள இ.தொ.கா. தலைவரும் அமைச்சருமான எஸ். தொண்டமான், அந்த வழக்கில் எம். எஸ். செல்லச்சாமி தமது பதில் மனுவைத் தமிழில் தாக்கல் செய்திருப்பதை ஆட்சேபித்திருக்கின்றார்.

செல்லச்சாமி சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதில் மனு தமிழில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் அதனைச் சரியான பதிலாக நீதிமன்றம் ஏற்கக் கூடாது என தொண்டமானின் சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்திருக்கின்றார்.

இ. தொ. கா. பொதுச் செயலாளர் என்ற முறையில் எம். எஸ். செல்லச்சாமி தொடர்ந்து செயற்படுவதையோ அல்லது பிரதிநிதித்துவப் படுத்துவதையோ தடை செய்யக் கோரி இ தொ. கா. தலைவர் என்ற முறையில் அமைச்சர் தொண்டமான் சார்பில் தாக்கல் செய்யப் பட்டுள்ள வழக்கு கடந்த திங்கட்கிழமையன்று கொழும்பு மாவட்ட நீதிபதி திருமதி சந்திரா எக்கநாயக்கா முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த ஆட்சேபனை எழுப்பப்பட்டது.

இந்த ஆட்சேபனையை எதிர்த்து வாதாடிய செல்லச்சாமியின் சட்டத்தரணி, அரசமைப்பின் 24 ஆவது பிரிவின் படி எவரும் அரசகரும மொழிகளான சிங்களத்தில் அல்லது தமிழில் ஏதேனும் ஆவணத்தைத் தாக்கல் செய்ய முடியும் என்று தெரிவித்தார்.

''தமிழ் நன்கு தெரிந்த தமிழரான தொண்டமானின் சார்பில் இத்தகைய ஆட்சேபம் கிளப்பப்படுவது குறித்து நான் மிகுந்த ஆச்சரியமடைகிறேன். தமது பதிலைத் தமிழில் தாக்கல் செய்வதற்கு சட்ட ரீதியாக — விட்டுக்கொடுக்க முடியாத — பாரதீனப்படுத்த முடியாத — கட்டுப்பாடு எதுவுமற்ற — உரிமை செல்லச்சாமிக்கு உண்டு'' — என அவரின் சட்டத்தரணி நீதிமன்றத்தில் மேலும் தெரிவித்தார்.

வழக்கு விசாரணை நாளை வரை ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது.

இ. தொ. காவின் சார்பில் சட்டத்தரணி பாலித குமாரசிங்கவும் செல்லச்சாமியின் சார்பில் சட்டத்தரணி எம். கே. ஜெயகிருஷ்ணாவும் ஆஜரானார்கள். (உ)

---


## தேவை

★ எழுத்துக் கோர்ப்பாளர்கள்
★ மெஷின் மைண்டர்கள்

எமது பதிப்பகத்துக்குத் தேவை.

இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
நேரில் வரவும்.

**பாரதி பதிப்பகம்**

430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(சி/2763)


---

## கண்ணீர் அஞ்சலி

யாழ். மத்திய கல்லூரியின் அதிபரும்
பழைய மாணவர் சங்கக் காப்பாளருமான
திரு. S. சிவன்ரூபன் அவர்களது
அருமைத் தாயார்

திருமதி
**செல்வரத்தினம் நாகரத்தினம்**

அவர்களது மறைவுக்கு எமது
ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

யாழ். மத்தியகல்லூரி
பழைய மாணவர் சங்கம்.

(சி/2761)

---


தென் இந்திய திருச்சபை யாழ் ஆதீனம்

## தொழிற் பயிற்சி நிலையம் வகுப்புகள்

மானிப்பாய், இணுவில், வட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் 19 ஆம் திகதி ஓகஸ்ட் 1996 இல் வகுப்புகள் ஆரம்பமாகின்றன. பதிவு செய்தவர்கள் சமுகம் அளிக்கவும்.

*குறிப்பு:*
வட்டுக்கோட்டை நிலையத்தில் மேலும் மாணவர் சேர்த்துக் கொள்ளப்படுவர். 16 ஆம் 17 ஆம் திகதி வெள்ளி, சனி, கிழமைகளில் காரியாலயத்தில் பதிவு செய்யலாம்.

திட்டப்பணிப்பாளர்

ஆதீன காரியாலயம்
வட்டுக்கோட்டை.

(42254)


---

உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்;

நிகழும் மங்களகரமான தாது வருடம் ஆவணித் திங்கள் 8 ஆம் நாள் (24-08 96)
சனிக்கிழமை மூல நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய மங்கள திருநாளில்
காலை 11-00 மணி முதல் 12-30 மணி வரையுள்ள துலா லக்கின
சுப முகூர்த்தத்தில்

எமது புதல்வன்
திருநிறை செல்வன்
**வேணுகோபன்**
அவர்களுக்கும்

எமது புதல்வி
திருநிறை செல்வி
**மைதிலி**
அவர்களுக்கும்

லண்டன் உயர்வாசற்குன்று முருகன் கோவில் மண்டபத்தில் திருவருள் துணை கொண்டு திருமணம் செய்து கொள்ளும் மங்கள வைபவத்திற்கு தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை வாழ்த்தி அதைத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

★ தங்கள் நல்வரவை நாடும் ★

திரு. திருமதி சற்குணநாதன்
''பிருந்தாவனம்''
மீசாலை தெற்கு,
மீசாலை.

திரு. திருமதி சுந்தரலிங்கம்
''மிதிலை''
கண்டி வீதி,
சாவகச்சேரி.

இருவீட்டார் அழைப்பு

(சி-2750)

---

## மரண அறிவித்தல்கள்

பன்னாலை

### குமாரசாமிக் குருக்கள் மகேஸ்வரக் குருக்கள்

தெல்லிப்பழை பன்னாலையைச் சேர்ந்தவரும், பன்னாலை வரத்தலம் கற்பகவிநாயகர் ஆலய ஆதீன கர்த்தாவுமாகிய குமாரசாமிக் குருக்கள் மகேஸ்வரக் குருக்கள் ( சின்னப்பா ஐயர் ) அவர்கள் 14- 8- 96 புதன் கிழமையன்று பகல் 12. 30 மணிக்குச் சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் முத்துச்சாமிக் குருக்கள், இராஜேஸ்வரி அம்மா, பரமசிவக் குருக்கள், கௌதம ஐயர் ஆகியோரின் அன்புச் சகோதரரும். சாரதாம்பாளின் அன்புக் கணவரும், மல்லிகாராணி, மகேந்திரசர்மா ஆகியோரின் அன்புத் தந்தையும், பத்மநாதக்குருக்களின் (சிவன் தேவஸ்தானம், யாழ்ப்பாணம்) மாமனாரும் வைத்தீஸ்வரசர்மாவின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 15- 08- 96 மு ப.11.00 மணிக்கு கரைப்பிரான் பிள்ளையார்கோவிலடி இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அண்மையில் உள்ளஇந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

தகவல்;
பிள்ளைகள்.

கரைப்பிரான் பிள்ளையார் கோவிலடி,
ஆனைக்கோட்டை.

(42259)

---

### திருமதி ஜெயமணி தர்மலிங்கம்

வறுத்தலைவிளானைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி ஜெயமணி தர்மலிங்கம் 13 - 8 - 96 இல் காலமாகிவிட்டார்.

இவர் திரு. திருமதி வேலாயுதபிள்ளை மங்கையர்க்கரசியின் மூத்த புதல்வியும், தர்மலிங்கத்தின் மனைவியும், ஜெகதீசன் (ஜேர்மனி), ஆனந்தன் (லண்டன்), திருமதி உமா சூரியகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14 - 8 - 96 புதன் கிழமை மாலை 3 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ. தர்மலிங்கம்
(கணவர்)

ஞானப்பிரகாசர் வீதி,
மல்வம்,
உடுவில்.

(42249)

---

திருமதி

### திரவியராசா(சண்முகம்) வசந்தாதேவி

கைதடியை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி திரவியராசா (சண்முகம்) வசந்தாதேவி 14 - 08 - 96 புதன்கிழமையன்று காலமானார்.

அன்னார் திரவியராசாவின் (சண்முகம் - வயரிங்) அன்பு மனைவியும், ரவிகுலன் (மெக்கானிக்), அகிலன் (சா/ டிறிபேக்கல்லூரி உ/த. மாணவன்), பிரதீபா (சா/ இந்துக் கல்லூரி), பிரவீனா (சா/ டிறிபேக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சின்னப்பழனி (தவில் வித்துவான், யாழ்ப்பாணம்) காலஞ்சென்ற திருமதி தையலாம்பாள் ஆகியோரின் புதல்வியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 15-08-96 முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கைதடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சண்முகம் (கணவர்)

கைதடி கிழக்கு, கைதடி.
(விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்துக்கு
அண்மையில்)

(42255)

---

### திருமதி காசிலிங்கம் அன்னலக்ஷ்மி

வேலணையைப் பிறப்பிடமாகவும் கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி காசிலிங்கம் அன்னலக்ஷ்மி (நல்லம்மா) அவர்கள் நேற்று (14-08-96) காலமானார்.

இவர் தையல்நாயகி, கதிர்வேல், அருள்வேல் அவர்களின் தாயாரும், கார்த்திகேசு, ஜெகதீஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

இவரது இறுதிக் கிரியைகள் நேற்று 2 மணியளவில் 67/21 பிஸ்கால் வீதி, ஐயனார் கோவிலடி இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுத் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கா. கதிர்வேல்
(மகன்)

ஐயனார் கோவிலடி,
வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.

(42248)

# செச்சின்யாவில் யுத்தத்தை நிறுத்த இரு தரப்பினர்களும் இணக்கம்

குரோஸ்னி, ஒக. 15

செச்சின்யாவின் தலைநகர் குரோஸ்னியில் கடந்த 8 நாள்களாக செச்சின்யப் பிரிவினைவாதிகளுக்கும், ரஷ்யத் துருப்புக்களுக்கும் இடையில் இடம்பெற்று வரும் சண்டை முடிவுக்கு வருகிறது. நேற்று நண்பகல்முதல் அங்கு போர் நிறுத்தம் மேற்கொள்வதென இருதரப்பினரும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

செச்சின்ய பிரிவினைவாதிகள் கடந்த வாரம் திடீர்த் தாக்குதல் மூலம் குரோஸ்னியின் பெரும்பகுதியை கைப்பற்றியதையடுத்து இருதரப்புக்கும் இடையில் கடும் சண்டை நடைபெற்று வந்தது. இந்தச் சண்டைகளில் நூற்றுக்கணக்கான ரஷ்யப் படையினர் கொல்லப்பட்டனர்.

ரஷ்யபாதுகாப்புச் சபைத் தலைவர் அலெக்ஸாண்டர் லெபேட் குரோஸ்னியில் பிரிவினைவாதத் தலைவர்களுடன் நடத்திய பேச்சுக்களையடுத்து நேற்று நண்பகல் முதல் போர் நிறுத்தம் செய்ய இருதரப்பும் இணங்கியதாக பி.பி.ஸி. தெரிவித்தது.

குரோஸ்னிக்கு முழுச் சுதந்திரம் வழங்குவது குறித்து இனிப் பேச்சுக்கள் ஆரம்பமாகும் எனவும்—

ரஷ்யத்துருப்புக்களை அங்கிருந்து அகற்றுவது தொடர்பாகவும் பேச்சுக்கள் நடக்கும் என்றும்— மாஸ்கோ செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்ட பின் நகரில் சிக்கியுள்ள மக்களை மீட்கவும்—

உணவு, குடி தண்ணீர் இன்றிக் கஷ்டப்படும் மக்களுக்கு உதவவும்— செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. (இ-3)

## தேர்தலை குழப்ப பாக். திட்டம்

இந்தியாவின் கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீரில் அடுத்த மாதம் நடக்கவிருக்கும் சட்டசபைத் தேர்தல்களைக் குழப்ப பாகிஸ்தான் திட்டமிடுவதாக ''நஷனல் ஹரோல்ட்'' என்ற பத்திரிகை நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

தற்கொலையாளிகளை அனுப்பி தாக்குதல் நடத்தவும் — பாகிஸ்தான் திட்டமிட்டுள்ளதாக அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது.

# ஆப்கானில் யுத்த நிறுத்தம்

காபூல், ஒக. 15

ஆப்கானிஸ்தானில் கடந்த 4 வருடங்களாக இடம்பெற்று வந்த மோதல்களை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் போர் நிறுத்தம் ஒன்று நேற்று முன்தினம் காலை முதல் அமுலுக்கு வந்தது.

ஐ.நா. பிரதிநிதியும், பாகிஸ்தான் அரசுப் பிரதிநிதியும் ஆப்கானிஸ்தான் அரசுடனும், கிளர்ச்சிக்குழுக்களுடனும் நடத்திய பேச்சுக்களின் பலனாக போர் நிறுத்தம் ஏற்பட்டுள்ளது.

கிளர்ச்சியாளர்கள் அரசுடன் இணைந்துசெயற்பட இணங்கியுள்ளனர் என ஐ நா பிரதிநிதி தெரிவித்தார்.

போர் நிறுத்தம் அமுலுக்கு வந்ததையடுத்து காபூலுக்கு வடக்கேயான பாதையை கிளர்ச்சியாளர்கள் திறந்து விட்டுள்ளதாகவும்—

காபூலுக்கு வடக்கு பகுதியே கிளர்ச்சியாளர்களின் கோட்டையாக விருந்தது எனவும் — தெரிவிக்கப்பட்டது.

ஆப்கானிஸ்தான் உள்நாட்டு யுத்தத்தில் கடந்த 4 வருட காலத்தில் 25 ஆயிரம் பேர் வரை கொல்லப்பட்டிருப்பதாக மதிப்பிடப்பட்டது.

போர் நிறுத்தத்தை உலக நாடுகள் வரவேற்றுள்ளன. (இ-3)

# வியாழன் கிரகத்தின் சந்திரனில் தண்ணீர்

## விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

வாஷிங்டன், ஒக. 15

வெவ்வாய்க் கிரகத்தில் உயிர் ஜீவ அனுக்கள் வாழும் சாத்தியப்பாட்டினை கடந்த வாரம் அமெரிக்காவின் நாஸா விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ள நிலையில்—

அமெரிக்காவின் அதி நவீன விண்கலமான 'கலிலியோ' அனுப்பியுள்ள ஆராய்ச்சி தகவல் ஒன்றில் வியாழன் கிரகத்தில் உள்ள ஒரு சந்திரனில் தண்ணீர் இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாம்.

பிரபஞ்சத்தின் பல கோள்களிலும் உயிர் இருப்பதற்கான சாத்தியங்களை இது காட்டுவதோடு நமது உலகம் எப்படி உருவானது, எப்படி மாற்றங்களுக்கு உள்ளானது என்பதை அறிய இந்த ஆராய்ச்சிகள் உதவும் என்று விஞ்ஞானி ஒருவர் தெரிவித்தார். (இ-3)

# சிம்பாப்வே ஜனாதிபதி 72 ஆம் வயதில் மறுமணம்

## மணப்பெண்ணுக்கு வயது 31

ஹராரே, ஒக. 15

சிம்பாப்வே ஜனாதிபதி றொபேட் முகாப்பே 31 வயதான பெண் ஒருவரைத் திருமணம் செய்யப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

72 வயதுடைய ஜனாதிபதி முகாப்பே 1992 ஆம் ஆண்டு தமது மனைவி இறந்த பின்னர், தனது இரு பிள்ளைகளுடன் வாழ்ந்து வருகிறார்.

இவரது முன்னாள் செயலாளரான கிரேஸ் முருபு என்பவரையே இவர் நாளை மறுதினம் திருமணம் செய்யவிருக்கிறார்.

இத்திருமணத்தின் போது மொஸாம்பிக் ஜனாதிபதி ஜோக்கிம்ஸிஸானோ, முகாப்பேக்கு மாப்பிளைத் தோழனாக இருக்கப் போகிறார்.

சிம்பாப்வே கத்தோலிக்க அதிமேற்றிராணியார் இத்திருமணத்தை நடத்தவிருக்கிறார்.

இத்திருமணத்தில் கலந்து கொள்ள விசேடமாக தென் ஆபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா, பொட்ஸ்வானா ஜனாதிபதி கெத்துமில்மைசர், நமிபிய ஜனாதிபதி சாம்நு ஜோமா ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (இ-3)

# பாகிஸ்தானில் அரசுக்கு எதிராக 15 எதிர்க்கட்சிகள் போர்க்கொடி!

## ஒத்துழையாமை இயக்கம் நடத்தப்போவதாக அறிவிப்பு

பாகிஸ்தான் பிரதமர் பெனாஸிர் பூட்டோ பதவி விலக வேண்டும் என்று கோரி 15 எதிர்க்கட்சிகள் ஒத்துழையாமை இயக்கம் ஒன்றை ஆரம்பிக்கப் போவதாக அறிவித்துள்ளன.

நாடாளுமன்ற பிரதிநிதி பதவிகளை ராஜினாமாச் செய்தல்-

நாடாளுமன்ற செயற்பாடுகளை புறக்கணித்தல்-

போன்ற போராட்டங்களை நடத்தப் போவதாக முன்னாள் பிரதமரும், முஸ்லிம் லீக்கின் தலைவருமான நவாஸ் ஷெரீப் அறிவித்தார்.

அரசின் செயல்களை கண்டிக்கும் வகையில் மாநிலங்கள்தோறும் கூட்டங்கள் நடத்தப்போவதாகவும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை- அரசு அறிவித்துள்ள வரி அதிகரிப்பையடுத்து வர்த்தகர்கள் கடை அடைப்பு செய்து அரசுக்கு எதிரான போராட்டம் ஒன்றை நடத்தி வருகின்றனர்.

# பிரான்ஸில் ஆபிரிக்கர்கள் உண்ணாவிரதப் போராட்டம்

பாரிஸ், ஒக. 15

பிரான்ஸின் கன்சர் வேட்டிவ் அரசாங்கத்தின் குடியேற்ற மறுப்புக் கொள்கையை எதிர்த்து பிரான்ஸில் அடைக்கலம் கோரியுள்ள 10 ஆபிரிக்கர்கள் 38 ஆவது நாளாக உண்ணாவிரதம் இருந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

தங்கள் உடைமைகள் அடங்கிய பிரயாணப் பைகளை தலையணைகளாகக் கொண்டு பாரிஸில் உள்ள செயின்ட் பேர்னாட் ஆலயத்தில் இவர்கள் இப்போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

''பஞ்சம், பசி, பட்டினி நிறைந்த தங்கள் தாயகத்துக்கு திரும்புவதிலும் பார்க்க இங்கேயே பட்டினி கிடந்து உயிர்விடுவது மேல்'' என்று 20 - க்கும் 30 - க்கும் இடைப்பட்ட வயதையுடைய அவர்கள் தெரிவித்தனர். (இ-3)

**உலக அரங்கில்**

# குடி போதையில் இருந்த 12 பேர் காதுகள் இழப்பு!

## ஹொண்டூராஸில் சம்பவம்

ஹொண்டூராஸ், ஒக. 15

இரவில் மதுபானச்சாலை ஒன்றுக்குள் நுழைந்த நபர் ஒருவர் அங்கு குடித்துக் கும்மாளம் அடித்துக் கொண்டிருந்த 12 பேரின் காதுகளை அவர்கள் கதறக் கதற கத்தியால் வெட்டி அறுத்துவிட்டு தப்பி ஓடிய சம்பவம் ஹொண்டூராஸ்

(4ஆம் பக்கம் பார்க்க)

# நிறுவனம் ஒன்றில் இராணுவ சீருடைகள்

## சீலிங்குக்குள் இருந்தனவாம்

கொழும்பில் உள்ள வெகுஜனத் தொடர்புடன் சம்பந்தப்பட்ட முக்கிய நிறுவனமொன்றினுள் தேடுதல் நடத்திய படையினர் ஒருசோடி இராணுவச் சீருடைகளைக் கண்டு பிடித்தனர் என கூறப்படுகிறது.

சம்பந்தப்பட்ட நிறுவனத்தில் கடந்த திங்கட்கிழமை திருத்த வேலைகளில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள், இராணுவப் பாணிச் சீருடை ஒன்று கூரைச் சீலிங்குக்குள் காணப்படுவதாக பாதுகாப்பு அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தனராம்.

இதையடுத்து அங்கு விரைந்த படையினர் பலத்த தேடுதல் நடத்தியபோது ஒரு சோடி இராணுவச்சீருடை பிராணி உடைகளைக்கண்டு பிடித்தனர் என்றும் கூறப்படுகிறது.

இரு வாரங்களுக்கு முன்னர் குறிப்பிட்ட நிறுவனத்தில் குண்டு வைக்கப்பட்டிருப்பதாக பாதுகாப்புப் படையினருக்கு அநாமதேய தகவல் ஒன்று கிடைத்ததையடுத்து, அங்கு தேடுதல் நடத்தப்பட்டது என்றும் —

குறித்த ஒரு பகுதியை சோதனையிட முற்பட்ட போது, அங்கிருந்த உயர் அதிகாரி அதற்கு ஆட்சேபனை தெரிவித்ததாகவும் —

பின்னர் உயர் அதிகாரிகளின் அனுமதியுடன் சோதனை நடத்தப்பட்டதாகவும் — தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

# ஆயுதங்களை கீழே வைக்கக்கேட்பது உண்மையான நாட்டுப்பற்று ஆகாது

## தமிழ் கத்தோலிக்க ஒன்றியம் அறிக்கை

நாட்டின் அமைதியில் உண்மையான அக்கறை கொண்ட நாட்டுப் பற்றுள்ள எவரும் தங்களது சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் தேசிய இன விடுதலை இயக்கத்தை தீர்வுக்கான எந்தவித ஆக்கபூர்வமான திட்டமும் இல்லாமல் ஆயுதங்களை கீழே வை என்று கூறுவது அவர்களது நாட்டுப் பற்றற்ற தன்மையை எடுத்துக்காட்டுகிறது.

தமிழ் கத்தோலிக்க ஒன்றியம் விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கீழே வைத்தால் மட்டுமே அரசு பேச முற்படும் என்று கூறுவது அவரது உண்மையான நாட்டுப் பற்றற்ற தன்மையை வெளிக்காட்டுகிறது.

அது இனப்பிரச்சனைக்கு தீர்வு அளிக்காது. யுத்தம் தேவையில்லை. சமாதானப் பேச்சுவார்த்தையே தீர்வுக்கு வழி என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ - 3)

## நல்லின கால்நடைகள் இல்லை

அச்சுவேலி ஒக. 15

நல்லின கால்நடைகள் இல்லாததால் வீடுகளில் ஆடு மாடுகளை வளர்ப்போர் பெரும் சிரமப்படுகின்றனர்.

இடம் பெயர்வை அடுத்து ஆடு மாடுகள் பெருமளவில் அழிக்கப்பட்டுவிட்டதே இதற்குக் காரணம். (இ-11)

## உப்பு இல்லை

அயடீன் கலந்த கறிஉப்புக்கு குடா நாட்டில் தட்டுப்பாடு நிலவுகிறது.

அண்மைக்காலத்தில் யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் 400 கிராம் அயடீன் கலந்த உப்பு10 ரூபா தொடக்கம் 12 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வந்தது.

கடந்த சில வாரங்களாக இந்த உப்பு கடைகளில் இல்லை. (இ-11)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### உதயம் வாடகைக்கு

பீங்கான் ரம்லர், தண்ணீர் ரம்லர், பந்திப்பாய், பிளாஸ்ரிக் பாய்கள், ஐஸ்கிறீம் கப்ஸ், குத்துவிளக்கு, கறி வாளிகள், சமையல் பாத்திரங்கள், கிடாரங்கள், சில்வர் றே இன்னும் பல வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம். உதயம்(வைற் கவுஸ் அருகில்)172, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(41870)

### தவறிவிட்டது

கந்தபுராணம் தக்ஷ காண்டம் (பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களது உரையோடு கூடியது) தாவடிப் பிள்ளையார் கோவிலுக்கும் கோண்டாவில் உப தபாற் கந்தோருக்கும் இடையிலுள்ள தெரு வீதியில் 10 - 08 - 96 சனிக்கிழமை மாலை தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் தயைகூர்ந்து மேற்படி பிள்ளையார் கோவிலில் ஒப்படைக்கவும். பிள்ளையார் திருவருள் புரிவார். (42238)

### EASY ENGLISH

ஆங்கிலத்தை இலகுவில் கற்கவும், கற்பிக்கவும் T.M. அன்ரனிப்பிள்ளை அவர்கள் எழுதிய Easy English 5 தொகுப்புகள் அடங்கிய நூல் எம்மிடம் விற்பனையாகிறது. கிடைக்குமிடம்: மக்மிலன் புத்தகசாலை, இல. 3, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

(42243)

### தொடர்பு கொள்ளவும்

கொழும்பு செல்வதற்கான பயண ஒழுங்குகள் சம்பந்தமாக கையொப்பமிடாத பல்கலைக்கழக திறந்த பல்கலைக் கழக மாணவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். முகவரி: மாற்றம், த. பெ. இல. 133, யாழ்ப்பாணம்.

(42250)

## NOTICE

UNIVERSITY OF JAFFNA

**FINAL M B B. S. EXAMINATION**

[REPEAT]

**SEPT. 1996.**

The above examination is scheduled to commence on 2nd September 1996 at the Faculty of Medicine, University of Jaffna.

The eligible students are requested to submit their Examination Entry Forms to the Deputy Registrar/ Examinations, University of Jaffna on or before 23. 08. 96.

The entry forms could be obtained from the Examination Branch/ The Jaffna Co-operative Stores, 154, Wolfendhal Street Colombo 13.

**REGISTRAR.**

(C/2757)

## குடிபோதையில்...

)3ஆம் பக்க தொடர்ச்சி)

நாட்டில் இடம் பெற்றது.

இது போன்ற காது அறுக்கும் சம்பவங்கள் மேற்படி நகரில் வீதிகளில் அடிக்கடி நடப்பதாகவும் —

காது அறுப்புக்கு குடிகாரர்களே இலக்காவதாகவும் —

ஏற்கனவே 12 பேர் காதுகளை இழந்தனர் என்றும் — தெரிவிக்கப்படுகிறது. (இ - 3)

## அடையாள அட்டை கவரிடுதல்

காரியாலய அடையாள அட்டை, பாடசாலை அடையாள அட்டை, தேசிய அடையாள அட்டை உட்பட சகல அடையாள அட்டைகளையும் வேண்டிய அளவுகளில் கவரிட்டு பெற்றுக்கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஸ்தாபனம்:

**கிளீன்கட்**

யாழ்ப்பாணம்.

(42245)

## நியூட்டன் கல்வி நிலையம்

82, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(ஆரியகுளம் சந்திக்கு அருகில்)

**கணக்கியல் வகுப்புகள்**

**A/L - 97**

கம்பனிக் கணக்குகள்

ஆரம்பம்:- **18-08-1996 — 12-00** மணி (ஞாயிறு)

குறிப்பு;- புதிய மாணவரின் வசதிக்கேற்பவும் நேர அட்டவணை வழங்கப்படும்

★ புதிய மாணவர் கற்காத பாடங்களும் மாணவர் விரும்பின் கற்பிக்கப்படும்.

**A/L - 98**

பிரிவு:- II ஆரம்பம்:- **18-08-1996 — 2-00** மணி

ஆசிரியர்:- திரு. சுதர்ஷன்

ஏனைய கலைவர்த்தக வகுப்புக்களும், அடிப்படை சிங்கள வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

(மேலதிக விவரங்கள் அலுவலகத்தில்)

(42247) — நிர்வாகி



மீண்டும் நெல்லியடியில் இயங்குகின்றது!

செவ்வாய், வியாழன், சனி

காலை 8-30 மணிமுதல் பகல் 12-30 மணிவரை

யாழ். வீதி, நெல்லியடி.

(மகாத்மா தியேட்டர் அருகாமை)

சிறந்த முறையில் பல் கட்டுவதற்கும், மூக்குக் கண்ணாடிகளைப் பெறுவதற்கும் இன்றே நாடுங்கள்:

**லாவண்யா**

**பல் மூக்குக் கண்ணாடி அகம்**

நெல்லியடி, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(சி/2730)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னையின் மடியில்: **25—04—1955**



இறைவன் அடியில்; **16—07—1996**

திருமதி

**மீனாம்பிகை பாக்கியநாதன்**

(சட்டமாணி, பிரசித்த நொத்தாரிஸ் சட்டத்தரணி, சத்திய ஆணையாளர்)

அன்பின் உறைவிடமாகவும், பாசத்தின் திருவுருவமாகியும் எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய் சுடர் வீசி அணையாத தீபமாகி எங்களை மண்ணில் தவிக்க விட்டு எங்கு சென்றீர்கள்! அம்மா உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

இன்று (15 - 08 - 96) நடைபெறவிருக்கும் வீட்டுக் கிருத்திய நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கணவன், பிள்ளைகள்.

மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை: (சி-2755)

### தேசிய அரசு பற்றிய

## அநுராவின் அறிக்கையால் ரணிலுக்கு பெரும் குழப்பம்

தேசிய அரசு பற்றி அநுரா பண்டாரநாயக்கா ஆங்கிலப் பத்திரிகைக்கு விடுத்த அறிக்கை குறித்து ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கா குழப்பமடைந்துள்ளார் என "திவயின" சிங்கள நாளிதழ் தெரிவிக்கிறது.

தேசிய அரசு பற்றிய விடயம் குறித்து ரணில் விக்கிரமசிங்கா ஏற்கனவே தனது எதிர்ப்பைத் தெரிவித்தார் எனவும்—

கடந்த வாரம் நடைபெற்ற ஐ.தே.க கூட்டத்தில் அநுராவின் அறிக்கை குறித்து ஆராயப் பட்டதாகவும்—அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கிறது.

அநுரா பண்டாரநாயக்கா ஐ.தே.கவின் தேசிய பட்டியல் மூலம் தெரிவானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(இ-10)

## விதை உருளைக்கிழங்கு உரிய நேரம் கிடைக்குமா?

### இதுவரை ஏற்பாடு எதுவும் இல்லை

யாழ் மாவட்ட விவசாயிகளுக்குத் தேவையான விதை உருளைக்கிழங்கு இந்த வருடம் உரியவேளையில் வந்து சேருமா?

இவ்வாறு விவசாயிகள் கேள்வி எழுப்புகின்றனர்.

விதை உருளைக்கிழங்கு விநியோகம் தொடர்பான பூர்வாங்க ஏற்பாடுகள் எதுவுமே இதுவரை யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படாமல் இருப்பதே இதற்குக் காரணம்.

குடாநாட்டில் மாரி மழையை அண்டிய காலப் பகுதியில் (புரட்டாதி - ஐப்பசி) உருளைக்கிழங்கு பயிரிடப்படுவது வழக்கம்.

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் விதை உருளைக்கிழங்கு இனங்களே யாழ். மாவட்டத்தில் அதிக விளைச்சலைக் கொடுப்பது குறிப்பிடத்தக்கது

[இ-11]

## அரச ஊழியர் நலன்கருதி பளை - யாழ். பஸ் சேவை

தென்மராட்சி, ஒக. 15

அரச திணைக்களங்களில் கடமையாற்றும் அரச ஊழியர்களின் நலன்கருதி வடபிராந்திய போக்குவரத்துச் சபையினால் புதிய பஸ்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தினமும் காலை 7.00மணிக்கும் 10.30 மணிக்கும் யாழ். பஸ் நிலையத்திலிருந்து புறப்பட்டு பளை பஸ் நிலையத்திற்கு செல்லும் பஸ்கள் காலை 10.00 மணிக்கும்—

பிற்பகல் 2 30 மணிக்கும்— பளை பஸ் நிலையத்திருந்து யாழ் நோக்கிப் புறப்படும்.

போக்குவரத்து சீரின்மையால் இப்பகுதி அரச ஊழியர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் தமது கடமைகளுக்கு உரிய நேரத்தில் செல்ல முடியாத நிலையை சுட்டிக்காட்டி பளைப் பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் வடபிராந்திய போக்குவரத்துச் சபை நிர்வாகத்தினருடன் தொடர்பு கொண்டதன் பின்னர் இப்புதிய பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இப் பஸ் சேவையினால் சாவகச்சேரி, கொடிகாமம் பகுதி ஊழியர்களும் நன்மையடைகின்றனர்.

இதேவேளை யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலைகளில்கல்வி பயிலும் மாணவர்களுக்கென தினமும் காலை 6 45 மணிக்கு கொடிகாமத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கான பாடசாலை பஸ் சேவை ஒன்றும் நடத்தப்பட்டு வருகிறது.

(இ-117

## கண்ணீர் அஞ்சலி

அமரர்களாகி விட்ட யா/கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலய ஆசிரியைகள்

திருமதி
**தனேஸ்வரி செல்வரெத்தினம்**

தோற்றம்: **03-03-1947** மறைவு: **23-04-1996**

திருமதி
**மேரிஸ்ரெலா ஜோண்சன்மக்சி**

தோற்றம்: **04-05-1963** மறைவு: **03-08-1996**

ஆகியோருக்கு எமது கண்ணீர்ப்பூக்களைக் காணிக்கையாக்குகிறோம். இவர்களது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அநுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யாழ்/கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்.

(42253)

## தமிழ் தட்டெழுத்தாளர் தேவை

மூன்று வருட முன் அனுபவமுள்ள தமிழ் தட்டெழுத்தாளர் தேவை. சான்றிதழ்களுடனும், சுயவிவரக்கோவையுடனும் நேரில் வரவும்.

**கிளீன்கட் யாழ்ப்பாணம்.**

(42244) — நிர்வாகி

உதயன்

## மக்கள் நலன் காக்குக!

கிளிநொச்சிப் பகுதிக்கு உடனடியாகப் போதிய உணவுப் பொருள்கள் அனுப்பப்படாவிட்டால் கடும் பஞ்சமும் அழிவும் ஏற்படும்.

இவ்வாறு கிளிநொச்சி அரச அதிபர், அரசாங்கத்துக்கு அனுப்பி வைத்துள்ள அவசர அறிக்கை ஒன்றில் எச்சரித்திருப்பதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

ஆனால் கிளிநொச்சிக்கான உணவுப் பொருள் விநியோகமும், நிவாரணப் பணிகளும் மிகமிக மந்தகதியிலேயே நடப்பது விசனத்துக்கு உரியதாகும்.

கிளிநொச்சி மற்றும் வன்னிப்பிரதேசத்துக்கு கடந்த மாதம் பதினேழாம் திகதியின் பின்னர் ஓர் அரிசி மணிதானும் எடுத்துச் செல்லப்படவில்லை என்ற நிலையில் வைத்துப் பார்க்கும் போது—

பத்து லொறிகளுடன் ஆரம்பித்த உணவுப் பொருள் எடுத்துச் செல்லும் ஏற்பாடு யானைப் பசிக்குச் சோளப் பொரி போட்ட கதையாகவே இருக்கிறது!

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் தானும் பணம் கொடுத்தேனும் பொருள்களை வாங்க முடியாத அளவுக்குப் பஞ்சம் வந்த பின்னர்—

பத்து லொறி உணவுப் பொருள் 'எந்த மூலைக்குக் காணும்?'

கிளிநொச்சியில் பட்டினியால் மக்கள் மாளும் ஆபத்தான நிலை உருவாகியிருக்கும் வேளையிலும் –

உணவுப் பொருள் ஏற்றி வருவதில் இத்தனை தடங்கல்களும், இழுபறிகளும் நிறைந்த செய்முறைகள் இருக்கத்தான் வேண்டுமா? உணவுவகைகளை வன்னிக்குக் கொண்டு வந்து சேர்ப்பதற்கு மாற்று ஒழுங்கு ஒன்று உடனடியாகச் செய்யப்பட வேண்டும்.

இல்லையேல் இன்னொரு நாடு (இந்தியாவாகவும் இருக்கலாம்) விமானத்தில் கொண்டு வந்து உணவுப் பொதிகளைப் போடும் நிலையை வலிந்து தோற்றுவிப்பதாக அமையலாம்.

மேலும் கிளிநொச்சியிலிருந்து ஒரு லட்சம் அகதிகள் வருவார்கள் என்று எதிர்பார்த்து வவுனியாவில் அவர்களைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளைத் தான் செய்திருப்பதாக அரசு கூறுகிறது இது சாத்தியப்படக்கூடிய ஒன்றல்ல.

கிளிநொச்சிக்கும் வவுனியாவுக்குமிடையில் உள்ள தூரம் 45 மைல்கள். மனிதனைக் கொல்லும் மிருகங்களும் விஷ ஜந்துக்களும் நிறைந்த அடர்ந்த காட்டுப் பகுதியால் கடும் வெயிலிலும் காரிருளிலும் நடந்து கடந்து செல்வது எத்தனை பேருக்கு இயலும்?

ஆகையால், கிளிநொச்சிக்கு உணவுப் பொருள்களை விரைந்து எடுத்துச் செல்வதற்கும், தண்ணீர், தங்குமிட ஏற்பாடுகள் உட்பட்ட நிவாரணப் பணிகளை உடன் மேற்கொள்ளவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

இல்லையேல் பட்டினி போடுதலை ஓர் இராணுவ ஆயுதமாகப் பயன்படுத்தி தமிழர்களைக் கொல்வதற்கு அரசு திட்டமிட்டுள்ளது என்ற குற்றச்சாட்டு உண்மையாகிவிடும்.

இது விடயத்தில், மக்கள் நலன் ஒன்றையே முன்வைத்து, முன்னுரிமை கொடுத்து. சகலதரப்புக்களும் ஒத்துழைத்துச் செயலாற்றுவது மிகமிக அவசியம்.

# மட்டக்களப்பில் பெரும் தாக்குதலுக்கு புலிகள் திட்டமிடுவதாகத் தகவல்

## பொலீஸ் பொறுப்பதிகாரி தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஓக. 15

மட்டக்களப்பு பகுதியில் பாரிய தாக்குதல் ஒன்றை நடத்த விடுதலைப் புலிகள் திட்டமிட்டுள்ளனர். இதற்காக விடுதலைப் புலிகள் நகருக்குள் ஊடுருவியிருப்பதாக தகவல் கிடைத்துள்ளது

இப்படி மட்டக்களப்பு பொலீஸ் பொறுப்பதிகாரி சாம் பந்துல தெரிவித்தார்.

மட்டக்களப்பில் அவர் நடத்திய கலந்துரையாடல் ஒன்றிலேயே இதனைத் தெரிவித்தார்.

தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகள் இக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

புலிகளினால் நடத்தப்படக்கூடிய எந்த ஒரு தாக்குதலையும் தடுக்க தமிழ் அரசியல் கட்சிப் பிரதிநிதிகளும், பொதுமக்களும் படையினருக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

'முல்லைத்தீவு தாக்குதலின் பின்கிழக்கு மாகாணத்திலும் பாரிய தாக்குதல் ஒன்றை நடத்த புலிகள் திட்டமிட்டு வருவதாகத் தெரிகிறது. இதற்காக சில புலி உறுப்பினர்கள் இங்கு அனுப்பப்பட்டுள்ளதாக அறிகிறோம்'! என்றும் அவர் கூறினார்.

பாதுகாப்புப் படைகளின் நடவடிக்கைகளால் தமிழ் மக்கள் அதிருப்தி கொண்டுள்ளார்கள். இதைப் போக்கும் வகையில் மக்களைப் பாதிக்காத வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என இச் சந்திப்பில் கலந்து கொண்ட தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

(இ-3)

## மாமாங்கத்தில் மற்றொரு குண்டு வெடிப்பு

கொழும்பு, ஓக. 15

மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் ஞாயிற்றுக்கிழமை இரவு நடந்த குண்டு வெடிப்பு சம்பவத்தை அடுத்து மறுநாள் அந்த ஆலய பொலீஸ் நிலைக்கு அருகிலும் மற்றொரு குண்டு வெடித்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பொலீஸ் நிலை அமைந்திருந்த வளவில் இக்குண்டு வெடித்தபோதும் எவரும் காயமடையவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

தற்செயலாக இக்குண்டு வெடித்ததாக பின்னர் பொலீஸார் தெரிவித்தனர்.

(உ-3)

## புளொட் உறுப்பினர் சூட்டுக்குப் பலி

கொழும்பு, ஓக. 15

அம்பாறை மாவட்டம் கல்முனையில் அண்மையில் புலிகளினால் சுடப்பட்ட ''புளொட்'' உறுப்பினர் ஒருவர் காயங்களுடன் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் அங்கு மரணமானார்.

(உ-3)

## கொலை

தென்மராட்சி, ஓக. 15

மாடுவிற்று வந்த பணத்தை பங்கிடுவதில் இரு நண்பர்களுக்கு இடையே ஏற்பட்ட தகராறு கொலையில் முடிந்தது.

மிருசுவில் கெற்பலியில் சில தினங்களுக்கு முன்னர் இடம் பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த கந்தசாமி பத்மநாதன் (வயது-33) என்பவரே உயிரிழந்தவராவார்.

மரணவிசாரணை நடத்திய ாவகச்சேரி மரணவிசாரணை அதிகாரி திரு. நா தர்மேந்திரன் கொலை எனத் தீர்ப்பளித்தார். (உ-11)

## தொண்டர் கலந்துரையாட்ல்

கொழும்புத்துறை, ஓக. 15

நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவத்தின்போது பணியாற்றும் தொண்டர்களுக்கான கலந்துரையாடல் இன்று பி. ப. 2. 30 மணிக்கு நல்லூர் இந்து விடுதியில் நடைபெறும்.

ம'நகரசபை ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் தலைமையில் நடைபெறும் இக் கலந்துரையாடலில் தொண்டர் சேவைக்கான இறுதி ஒழுங்குகள் குறித்து முடிவு செய்யப்படும். (அ-30)

# எதிர்ப்புக்கு மத்தியிலேயே பிரேமா புலிகளுக்கு ஆயுதம் வழங்கினார்!

## முன்னாள் பாதுகாப்பு அமைச்சுச் செயலர் தகவல்

கொழும்பு, ஓக. 15

இந்திய அமைதி காக்கும் படையின் ஆதரவுடன் தமிழ்த் தேசிய இராணுவம் நாட்டின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக இருந்ததால் அதனை அடக்குவதற்காக விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களை வழங்க வேண்டும் என்று காலஞ்சென்ற ஜனாதிபதி ஆர். பிரேமதாசா உறுதி பூண்டார். எதிர்ப்புக்கு மத்தியிலேயே அவர் அந்த ஆயுதங்களை வழங்கினார்.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சேபால ஆட்டிகல மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

லெப்டினன்ட் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ, ஜெனரல் விஜேய விமலரத்ன மற்றும் 8 பாதுகாப்பு படை அதிகாரிகளின் படுகொலை குறித்து விசாரணை செய்து வரும் விசேட ஆணைக்குழு முன்னிலையிலேயே ஜெனரல் ஆட்டிகல இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இந்திய அமைதி காக்கும் படையினர் தமிழ்த் தேசிய இராணுவத்திற்கு கனரக ஆயுதங்களை வழங்கி பயிற்சியும் அளித்து வந்ததாகப் பிரேமதாசா என்னிடம் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கில் இந்திய அமைதிகாக்கும் படை செயற்பட்டு வந்ததால் இலங்கை இராணுவம் முகாம்களுக்குள் முடக்கப்பட்டுள்ளது என்றும்-

இவ்விதம் இராணுவம் முகாம்களுக்குள் இருப்பது அதற்கு அவமானத்தைக் கொடுக்கிறது என்றும்- அவர் மேலும் கூறினார்.

1989 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முற்பகுதியில் நான் பிரேமதாசாவின் வாசஸ்தலத்துக்கு அழைக்கப்பட்டேன்.

விடுதலைப் புலிகளுக்குக் கையளிப்பதற்கான ஆயுதங்கள், வெடிபொருள்கள் ஆகியன அடங்கிய பட்டியல் ஒன்றை அவர் என்னிடம் தந்தார்.

விடுதலைப் புலிகளுடன் நடத்தப்பட்ட சமாதானப் பேச்சு வார்த்தையின் போது ஆயுதக் கொடுக்கல் வாங்கல் குறித்து ஒருபோதுமே பேசப்படாததால் இது எனக்குப் பெரும் அதிர்ச்சியைத் தந்தது.

ஜனாதிபதி பிரேமதாசா முன்னிலையிலேயே அந்த ஆயுதப் பட்டியலில் இருந்த பல கனரக ஆயுதங்கள் பலவற்றை நான் நீக்கிவிட்டேன்.

புலிகளுக்கு ஆயுதம் வழங்குவது புத்திசாலித்தனமானதல்ல என்று ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு நான் அறிவுரை கூறினேன்.

எனினும் தமிழ்த் தேசிய இராணுவத்தை அடக்கி சமாதானத்தை ஏற்படுத்துவது தனது திட்டம் என்றும்-

அதற்கு புலிகளுக்கு ஆயுதங்களை வழங்க வேண்டும் என்றும் –

ஜனாதிபதி பிரேமதாசா உறுதியாகத் தெரிவித்தார்.

இந்தியப்படை வெளியேறியதும் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்துக்கும் இடையில் மோதல் ஏற்படுவதை நான் விரும்பவில்லை.

இதனால் நான் ரஞ்சன் விஜேரத்னாவைச் சந்தித்து, புலிகளுக்கு ஆயுதம் வழங்க வேண்டாம் என்று ஜனாதிபதிக்கு ஆலோசனை கூறுமாறு அவரிடம் தெரிவித்தேன்.

அப்போதைய இராணுவத் தளபதி ஹமில்டன் வனசிங்கவும் இந்த ஆயுத விநியோகத்தைக் கடுமையாக ஆட்சேபித்தார் - இவ்வாறு அவர் மேலும் கூறினார்.

## குண்டு கண்டுபிடிப்பு

கொழும்பு, ஓக. 15

மட்டக்களப்பு நகரில் கொபற் வீதியில் — வழமையாக மாலை வேளைகளில்— இராணுவத்தினரும், பொலீஸாரும் வந்து செல்லும் உணவு விடுதி ஒன்றிலிருந்து நேரம் குறித்து வெடிக்கவைக்கும் — அதி சக்தி வாய்ந்த— குண்டு ஒன்று கண்டு பிடிக்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டது.

கடந்த ஞாயிறு மாலை விடுதியில் உணவு அருந்திவிட்டுச் சென்ற இருவர் அங்குள்ள மேசை அருகே பார்சல் ஒன்றை விட்டுச் சென்றதாகவும்—

அந்த பார்சலிலேயே இக்குண்டு காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## ஊர்காவலர் பலி

கொழும்பு, ஓக. 15

பொலன்னறுவை மாவட்டம் றிஜிபக்குனு என்ற இடத்தில் விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளித்துவந்த ஊர்காவலர் மீது நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஊர்காவலர் ஒருவர் உயிரிழந்ததாகவும் புலிகளின் தாக்குதலை ஊர்காவலர்கள் முறியடித்ததாகவும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்தது.

(உ-3-4)

# தாய்மையின் விடிவெள்ளி அன்னை மரியாள்

யாழ். மரியன்னையின் பேராலய விண்ணேற்பு விழா பக்தி உணர்வோடு இன்று கொண்டாடப்படுகிறது. அதனையொட்டி இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.

கிறிஸ்துவத்தின் உயிர்ப்பும் உயிரும் கிறிஸ்துவே. அந்த கிறிஸ்துவின் பிறப்பிலும் வாழ்விலும் உயிர்ப்பிலும் தமது பிரமாணிக்க வாழ்க்கையால் இறைவனால் தெரியப்பட்டு கிறிஸ்துவின் தாயாக உலகுக்கு அன்று அறிமுகப் படுத்தப்பட்டவளே புனித மரியாள்.

மரியாளின் மகத்துவத்தை அன்றைய சமூகம் ஏற்றுக்கொள்ள மறுத்ததுடன், ஏளனப் பேச்சுக்களையும், சட்டத்தின் முன் சமுதாயம் நிறுத்தி வேடிக்கை பார்த்ததையும் வரலாறு கூறி நிற்கிறது.

கிறிஸ்துவின் பிறப்புக்கு தெரியப்பட்டபோது பல முறை ஏற்பட்ட துன்ப துயரங்களை இறைசித்தமென தாங்கிக் கொண்டு இகழ்ந்தோருக்காக இறைவனை இறைஞ்சினாள். மன்னிப்புக்கு மறு வடிவம் கொடுத்ததால் இன்று மாண்புறும் நிலைக்கு உயர்த்தப்பட்டு விண்ணேற்பு அன்னையாக, மக்களின் துயர்களைய வேண்டி நிற்கும் அன்னை மரியாளாக இன்றும் காட்சி கொடுக்கிறாள். அகிலமே இன்று அன்னையின் புகழைக் கொண்டாடி மகிழ்கிறது.

தாயுள்ளங்கள் இன்று துயரைத் தாங்க முடியாது தவிப்பது போன்றே அன்றும் மரியன்னை தன் மைந்தன் யேசுவை துன்புறுத்தி சிலுவையைச் சுமந்து சித்திரவதை செய்து கொலைக் களத்துக்கு கூட்டிச் செல்லும் நிலையில் எதிர் கொண்ட மன நிலை மனக்கண்முன் தெரிகிறது.

தாய்மையின் விடிவெள்ளியாக இறைபற்றுடனும் நம்பிக்கை வாழ்வுடனும் வழிகாட்டிய அன்னை மரியாளின் அரவணைப்பை ஏற்று ஆறுதலடைவோம். தாய்மையின் மன உணர்வை உணர்ந்த மாசற்ற குழந்தை யேசுவை ஈன்றெடுத்து பரலோகத்தில் பரிந்து பேசுகின்ற பிள்ளையாம் மரியாளிடம் மனத்துயரைக் கூறுவோம்.

மாசற்ற மாமரியின் விண்ணேற்பு விழாவில் பங்கேற்கும் பக்தர்களின் மனத்துயர் தீர அகதிகளாக, அநாதைகளாக அல்லற்படும் மக்கள் துயர்தீர மரியன்னை வழியாக இறைவனை வேண்டுவோம்.

''காப்பாற்றும் காலம்
இது தேவனே!
கைகொடுக்கவா மரியின்
செல்வனே!''

என்று மரியன்னையின் விண்ணேற்பு நாளில், பக்தி உணர்வுடன் நிரந்தர அமைதி சமாதானத்தை நிலையாக பெற்று வாழ அவளது வழியாக வேண்டுவோம்.

செ. யோசப் பாலா

# கொல்லம், கற்பிட்டிப் பகுதிகளில் காணப்பட்ட மர்மக் கப்பல் எங்கே?

## அது புலிகளுக்கு வந்ததா?

கொழும்பு, ஒக. 15

கடந்த வாரம் கற்பிட்டிக்கு அப்பால் கடலில் காணப்பட்ட மர்மக் கப்பலை ஸ்ரீலங்கா கடற்படைக் கப்பல்களும், விமானப்படை விமானங்களும் தேடி வருகின்றன; எனினும் இக்கப்பல் இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை.

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களை ஏற்றிக்கொண்டு கப்பல் ஒன்று இலங்கையை நோக்கி வந்துகொண்டிருப்பதாகக் கடந்த வாரம் பாதுகாப்புத் துறையினருக்குத் தகவல் கிடைத்ததையடுத்து கப்பலைத் தேடும்படி பொலீஸாரும் படையினரும் பணிக்கப்பட்டிருந்தனர்.

கற்பிட்டிக்கு வடக்கே ஒரு மர்மக் கப்பல் வடக்கு நோக்கிச் சென்றுகொண்டிருந்ததாகவும் —

அக்கப்பலுக்கு இரு அதிவேகப் படகுகள் பாதுகாப்பு அளித்தவண்ணம் சென்றுகொண்டிருந்ததாகவும்—

அந்தப் படகுகளில் இருந்தவர்களிடம் ஆயுதங்களும் தொலைத்தொடர்பு சாதனங்களும் இருந்தன என்றும்—

கற்பிட்டியைச் சேர்ந்த மீனவர்கள் வென்னப்புவ பொலீஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் கேரளத்திலுள்ள கொல்லத்தில் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சுங்க அதிகாரிகள் அநாமதேயக் கப்பல் ஒன்றைக்கண்டதாகவும்—

தொலைநோக்கி மூலம் அவதானித்தபோது அக்கப்பலில் அதன் பெயர் பொறிக்கப்பட்டிருக்காததோடு கொடி எதுவும் பறக்கவிடப்படாததையும் அவர்கள் அவதானித்ததாகவும்—

இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சுங்க அதிகாரிகள் அநாமதேயக் கப்பலுடன் தொடர்பு கொண்டபோதும் பலன் கிடைக்காது போகவே இக்கப்பல் பற்றி தரைக் காவற்படை, மாவட்டப் பொலீஸார் இந்திய கடற்படையினர் ஆகியோருக்குத் தகவல் அனுப்பினர்.

எனினும் கடற்படைக் ஹெலிக்கொப்டர் மறுநாளே வந்து சேர்ந்ததால் அதற்குள் அக்கப்பல் மறைந்துவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது

இந்தக் கப்பலின் மர்மமான நடமாட்டத்தை வைத்து இக்கப்பலுக்கு விடுதலைப் புலிகளுடன் தொடர்பிருக்கலாம் என இந்திய அதிகாரிகள் சந்தேகிக்கின்றனராம்.

இந்தியாவின் தெற்குக் கரையில் அமைந்துள்ள கொல்லம் பாதுகாப்பான — ஒதுக்குப்புறமான இடம் என விடுதலைப் புலிகளால் இனங் காணப்பட்டுள்ளதாகவும்—

எனவே அத்துறையைப் பயன்படுத்த புலிகள் முயற்சிக்கலாம் எனவும் —

இந்திய அதிகாரிகள் நம்புவதாகத் தெரிவிக்கப்பட்டது

(உ-10)

## உரிய நடவடிக்கை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு கூறினார்.

தற்போது எழுந்துள்ள நிலை குறித்து இந்தியப் பிரதமருடன் தொலைபேசியில் பேச முயன்றேன் ஆனால் பிரதமர் வடமாநிலத்துக்குச் சென்றுள்ளதால் அவருடன் தொடர்பு கொள்ள முடியவில்லை.

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும் அரச இராணுவத்துக்கும் இடையே போர் முற்றி வருவதால் மேலும் அகதிகள் தமிழ் நாட்டுக்கு வருவதற்கு வாய்ப்புகள் உள்ளன. இதனால் கடலோரக் காவல் படை, காவல் துறையினர் போன்றோரை எச்சரிக்கையாக இருக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டுக்கு வரும் ஈழத் தமிழர்கள் அனைவரும் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்படுவார்கள். அவர்களில் புலிகளுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப் படுவோர் சிறப்பு முகாம்களில் வைக்கப்படுவர்.

போர் முற்றி வருவதால் புலிகளே தங்களை நாட்டை விட்டு வெளியேறுமாறு ஆலோசனை கூறினார்கள் என்று ஏற்கனவே வந்துள்ள அகதிகள் கூறியுள்ளனர்.

1990 ஆம் ஆண்டளவில் பெரும் அளவில் அகதிகள் தமிழகம் வரும் சூழ்நிலை ஏற்பட்டது. 1992 இற்குப் பின் அவர்களில் 54 ஆயிரம் அகதிகள் தாயகத்துக்குத் திருப்பி அனுப்பப்பட்டு விட்டனர்.

தமிழகத்தில் இப்போது 115 முகாம்களில் சுமார் 56 ஆயிரத்து 750 ஈழத் தமிழர் தங்கவைக்கப்பட்டுள்ளனர். — இவ்வாறு கருணாநிதி மேலும் தெரிவித்தார். (உ-3-4)


## காணவில்லை

### முதலி. கந்தையா

(கண்ணாடி அணிபவர்)

மானிப்பாய் மெமோறியல் வேனை வதிவிடமாகக் கொண்ட இவர் 5 அடி உயரம்; பொது நிறமானவர். கடைசியாகக் காணப்பட்டபோது சாதுவான பச்சை நிற சேட்டும் நீல நிறக் கோடிட்ட சாரமும் அணிந்திருந்தார். கடந்த 20 - 04 - 96 மீசாலையிலிருந்து இடம் பெயர்ந்த போது கச்சாய் வீதியில் வைத்துத் தவற விட்டுவிட்டோம். இவரின் பிரிவாற்றாமல் சகோதரி (நேசம்மா) சுகவீனமுற்றுள்ளார். இவரைக் கண்டு அறிந்தவர்கள், தெரிந்தவர்கள் தயவுசெய்து கீழ்க் கண்ட முகவரிக்கு அறியத்தரவும். நன்றியுடையோம்.

தகவல்:
யா. விக்டர்
(பெறாமகன்)

அ. நேசம்மா,
மெமோறியல் லேன்,
மானிப்பாய் வடக்கு,
மானிப்பாய்.

(42256)



## இடம் மாற்றம்

### த பினான்ஸ் கொம்பனி

யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதியில் இயங்கிவந்த

**The Finance Company Limited**

ஸ்தாபனம் இன்று (**15 08-96**) முதல் யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதி, 180 ஆம் இலக்கத்தில் உள்ள இராசா டீசல் ஸ்தாபனத்தின் மேல் மாடியில் இயங்குகின்றது என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

நன்றி!

(42241) நிர்வாகம்


**மரண அறிவித்தல் 2 ஆம் பக்கத்தில்**

## அடையாள அட்டைகள் விநியோகம்

யாழ்ப்பாணம், ஒக. 15

யாழ். பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த மக்களில் 4 ஆயிரம் பேரின் விசேட அடையாள அட்டைகள் தற்சமயம் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

நேற்று முன்தினம் ஆரம்பமான இந்தப்பணி இன்னும் ஓரிரு நாள்களில் நிறுத்தப்படுமாதலால், மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள் உட்பட சகலரும் உடன் தமது அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். பிரதேச செயலர் கேட்டுள்ளார். (உ-3)

## வன்னி...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:-

அரசாங்கம் தமிழ் மக்களுக்குத் தொடர்ந்தும் தனது உதவிகளை வழங்கும்

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள தமிழ்ப் பகுதிகளுக்கு அரசாங்கத்தினால் கடந்த பத்து வருடங்களாக வழங்கப்பட்ட உணவுப் பொருள்கள் புலிகளினால் அவர்களின் தேவைக்கு எடுக்கப்பட்டது.

இதனால் அரசாங்கத்துக்குப் பெரும் இழப்பு ஏற்பட்டது.

எனினும் சமாதானத்தை அடையும் வரையும் தமிழ் மக்களுக்கு உணவு உதவி தொடர்ந்தும் வழங்கப்படும் — என்றார். (அ-3)

## வெளிநாட்டு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யஸ்தத்தை நாம் மறந்து விட முடியாது.

யுத்தத்தினால் வடக்கிலும் மலையகத்திலும் உள்ள தமிழர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்; நெருக்குதல்கள் அதிகரித்துள்ளன.

யுத்தத்தினால் இந்தப் பிரச்சினைக்கு தீர்வுத் கண்டு விட முடியாது. யுத்தத்தினால் மக்களேபாதிக்கப்படுவார்கள். இதுவே கவலைக்குரியது.

தொழில் வாய்ப்புக்காக கொழும்பு வரும் மலையக இளைஞர்கள் பலர் கைது செய்யப்பட்டுப் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர்.

நானும் கூட அவ்வாறு மூன்று வருடங்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் சிறையில் இருந்தவன்; அங்கு நடைபெறுவதை நேரில் கண்டவன்.

— இவ்வாறு மேலும் அவர் கூறினார். (உ-3)

## சந்திரிகா ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கும் உள்ளூராட்சித் தேர்தல்களை மனதில் வைத்தே அத்தேர்தல்களில் மக்கள் ஆதரவைத் திரட்டும் நோக்குடன் —ஐ. தே. க. இந்த முயற்சியில் ஈடுபட்டிருப்பதாக அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டனர். (உ-10)

## தமிழ் இளைஞர் மரணம்

கொழும்பு, ஒக 15

கண்டி பொலீஸ் நிலைய தடுப்புக் காவல் அறைக்குள் உணர்வற்ற நிலையில் காணப்பட்ட தமிழ் வாலிபர் ஒருவர் கண்டி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபோது உயிரிழந்திருக்கக் காணப்பட்டார்.

மஸ்கெலிய சின்ன கரவத்தை தோட்டத்தைச் சேர்ந்த எம். இராஜலிங்கம் என்பவரே மரணமானவராவார்.

கண்டி குட்செட் பஸ் நிலையத்தில் பஸ் ஒன்றின் பக்கக் கண்ணாடியை உடைத்த குற்றச் சாட்டின் பேரில் இவர் பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். (உ-3)

## ஆட்களில்லாத வீடுகளில் திருடர் கைவரிசை

வடமராட்சி, ஒக. 15

புலோலிகிழக்கு சந்தா தோட்டம் பகுதியிலுள்ள ஆட்களில்லாத வீடுகளில் பொருள்கள் திருடப்பட்டு வருகின்றன.

இந்த வீடுகளில் தளபாடங்கள் மாத்திரமன்றி வீட்டின் ஓடுகள், கூரைகள், ஜன்னல்கள் போன்றவையும் திருடப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-173)

## இயந்திரத்தின் ஓசை களவைக் காட்டித் தந்தது

வலிகாமம் தெற்கு, ஒக. 15

வலிகாமத்தில் இருந்து இடம் பெயர்ந்த போது தனது நீர் இறைக்கும் இயந்திரத்தை களவு கொடுத்தவர் அந்த இயந்திரத்தின் ஓசையைக் கொண்டு அதனை மீண்டும் கண்டு பிடித்த சம்பவம் சில தினங்களுக்கு முன்னர் உரும்பராய் தெற்கில் இடம்பெற்றது

இயந்திரத்தை மீளப் பெற்றவர் தெரிவித்ததாவது:-

கடந்த வருடத்தில் இடம் பெயர்ந்தபோது எனது வீட்டுப்பொருள்களுடன் இந்த இயந்திரமும் காணாமல் போய் விட்டது.

தெருவால் போகும்போது உரும்பராய் வீடொன்றில் இயங்கிக்கொண்டிருந்த அந்த இயந்திரத்தின் ஓசையைக் கொண்டு அது என்னுடையது என உறுதி செய்தேன்.

கிராமசேவையாளரிடம் முறைப்பாடு செய்து அவருடன் சென்று இயந்திரத்தைப் பாவித்து வந்த நபரிடம் கேட்ட போது அதனை தனக்கு வேறொருவர் கொடுத்ததாகவும்—

இயந்திரத்தை திருத்த தாம் அதிக பணம் செலவிட்டுள்ளதாகவும் — தெரிவித்தார்.

திருத்தச் செலவின் ஒரு பகுதியை அவரிடம் கொடுத்து எனது இயந்திரத்தை பத்துமாதத்தின் பின் மீண்டும் பெற்றுக் கொண்டேன்.

இப்படி அவர் கூறினார். (இ-152)

## சம்பள கமிஷன் அறிக்கை 3 கட்டங்களாக அமுல்!

### முதல் கட்டம் அடுத்த ஜனவரியில்

கொழும்பு, ஒக.15

பி. சி. பெரேரா சம்பளக் கமிஷன் செய்த சம்பள உயர்வுச் சிபார்சுகள் மூன்று கட்டங்களாக அமுல் செய்யப் படும்.

முதற் கட்டம் 1997 ஜனவரி முதல் அமுலுக்கு வரும்.

மேற்கண்ட தகவலை ஜனாதிபதி தம்மிடம் தெரிவித்ததாக பொதுத்துறை தொழிற் சங்கங்களின் ஒருங்கமைப்பாளரான எச். பியதாச பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சம்பளக் கமிஷனின் சிபார்சை அமுல் படுத்த 3000 கோடி ரூபா செலவாகும் என்பதால், மூன்று கட்டங்களாக சம்பள உயர்வு அமுல் செய்யப்படும் என்று ஜனாதிபதி கூறியதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

## சிங்கர் போட்டிக்கான இலங்கை அணி விவரம்

கொழும்பு, ஒக. 15

இம் மாதம் 23 ஆம் திகதி ஸ்ரீலங்காவில் நடைபெறவுள்ள ''சிங்கர்'' கிண்ணத்திற்கான ஒரு நாள் கிரிக்கட் போட்டியில் பங்குபற்றும் ஸ்ரீலங்கா அணியில் இடம் பெறும் வீரர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

உலகக் கிண்ணத்தை சுவீகரித்த ஸ்ரீலங்கா அணியில் இடம்பெற்ற வீரர்களே இக்குழுவில் இடம் பெறுகின்றனர்.

அவர்களின் விபரம் வருமாறு:-

அர்ஜுனா ரணதுங்கா (கப்டன்), அரவிந் டீசில்வா (உப கப்டன், றோஷான மஹாநாம, அசங்க குருசிங்க, ஹர்ஷன் திலகரத்தின, சனத் ஜெயசூரியா, பிரமோதய விக்கிரமசிங்க, சமிந்த வாஸ், ருமேஸ் களுவித்தான, முத்தையா முரளிதரன், குமார் தர்மசேனா, ரவீந்திரா புஷ்பகுமார, உப்புல் சந்தன, மாவன் அத்தபத்து.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 15-08-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.